[1974 ஏப்ரல் 10

திரு. கு. காமாட்சி: பெரும் பணக்காரர்கள் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்க குதிரைப் பந்தயத்திற்குப் போவதாக அனுபவம் மிக்க செழியன் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். ஆகவே அங்கு போகிறவர்களைக் கண்காணிக்க ஏதாவது விஜிலன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அதல்லாமல் என்னைப் போன்று, பாலசுந்தரம் அவர்களைப் போன்றவர்கள் குதிரைப் பந்தயத்தைப் பார்த்ததில்லை. முதல் அமைச்சர் அவர்கள்கூட பார்க்கவில்லை. எனவே முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் எங்களைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு தடவை அந்தப் பந்தயத்தைக் காண்பிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வருகிற 14-ம் தேதி அன்று அங்கு ஒரு பரிசு அளிக்கப்பட இருக்கிறது, முதல் அமைச்சர் கோப்பை என்ற தலைப்பில் ஒரு பரிசு அளிக்கிற விழா நடக்க இருக்கிறது. அதற்கு எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் நிச்சயமாக வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், டிக்கட் வாங்கிக் கொண்டு.

திரு. கோவை செழியன்: அனுபவம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை.

Assistance to persons affected by fire at Port Blair.

* 803 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any amount has been offered to the Port Blair Fire Victims from the Chief Minister's Relief Fund in January and February 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதற்காக, அந்தமான்—நிக்கோபார் தீவுகள் தலைமை ஆணையாளருக்கு 1 இலட்சம் ரூபாய் (ஒரு இலட்சம் ரூபாய் மட்டும்) 1—2—1974-ல் அனுப்பிவைக்கப்பட்டது.

1974 ஏப்ரல் 10]

திரு. க. உரொ. எட்மண்ட்: இதற்கு தமிழக அரசு எவ்வளவு அனுப்பியிருக்கிறது என்று சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு லட்சம் ரூபாய்.

திரு. கு. பெரியசாமி: போர்ட்ப்ளேயரில் ஏற்பட்ட தீ விபத்திற்கு தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. அண்மையில் வட ஆர்காடு மாவட்டத்தில் நடந்த தீ விபத்திற்கு அண்டை மாநிலங்களிலிருந்தோ அல்லது வெளி நாடுகளிலிருந்தோ நமக்கு ஏதாவது உதவி வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்டை மாநிலங்களிலிருந்து வரவில்லை. அண்டை மாநிலங்களில் நடைபெறுகிற வெள்ள விபத்துக்களுக்குக்கூட தமிழக அரசு சார்பாக முதல் அமைச்சர் நிதியிலிருந்து நாம் பண உதவி அளித்திருக்கிறோம். ஆனால் பிரதமர் அவர்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய் தமிழக அரசு வேண்டுகோளுக்கிணங்க அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன்: அந்தமான்—நிக்கோபர் தீவிலிருந்து இந்தமாதிரி ஏதாவது உதவி அளிக்கும்படி கோரிக்கை ஏதாவது வந்ததா? அப்படி கோரிக்கை வந்திருந்தால் யாரிடமிருந்து அந்தக் கோரிக்கை வந்தது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தத் தீ விபத்து ஏற்பட்டதையொட்டி அந்தமான் தீவு திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. மருதவாணன் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள், தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று. அந்தக் கடிதத்தையொட்டியும் அந்தமான் தீவில் ஏற்பட்ட பயங்கரமான தீ விபத்தைப்பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளையொட்டியும் முதல் அமைச்சர் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், அந்தமானில் ஏற்பட்ட அந்த தீ விபத்து குறித்து வேறு மாநிலத்திலிருந்து ஏதாவது உதவி செய்யப்பட்டு இருக்கிறதா? அந்தமான் தீவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பவர் ஒருவர் மத்திய அரசில் அமைச்சராக இருக்கிறாரே, மத்திய சர்க்கார் ஏதாவது நிவாரணம் கொடுத்து இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் இல்லை. ஆனாலும் அந்தமானிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே சென்று அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார் என்ற செய்தியை நான் பத்திரிகையில் பார்த்ததுதான்.

திருப்பூர் ஒன்றியத்தின் கீழுள்ள மருந்தகங்கள்

* 804-வினு—திரு. சு. **துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எந்தெந்த மருந்தகங்களை அரசு 1973–74 ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நடப்பு ஆண்டில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

Co-operative Rural Dispensaries

* 805 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open Co-operative Rural Dispensaries in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மருத்துவப் பட்டதாரிகளுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும், மருத்துவப் பராமரிப்புப் பணிகளில் பொது மக்களும் பங்கு கொள்ள வகை செய்யவும், அரசு, 1973–74-ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 13 கிராமப்புற கூட்டுறவு மருந்தகங்கள் திறக்கக் கருதியுள்ளது. முன்னோடித் திட்டமாக இந்த மருந்தகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி